R 4346 (page 73) (தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி)

## DELIVERANCE IN ANSWER TO PRAYER

## ஏன் ஒருவர் மரணத்தில் எடுக்கப்பட்டார் மற்றும் மற்றவர் உயிரோடு விடப்பட்டார்

R4347 : page 74

அப்போஸ்தலனாகிய யாக்கோபைக் கொல்ல ஏரோது ஏன் அனுமதிக்கப்பட்டார் என்றும், ஏன் அவர் அப்போஸ்தலனாகிய பேதுருவைக் கொல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் உள்ள கேள்விகள் எழும்பவே செய்கின்றது. சுவிசேஷ வேலையில் இன்னும் ஏதேனும் பங்காற்றுவதற்குப் பரிசுத்த யாக்கோபு அடிகளார் தகுதியற்றவராய் இருந்தாரா? அல்லது அப்போஸ்தலனாகிய பேதுருவைக் காட்டிலும் தகுதியில் குறைவானவராய் இருந்தாரா? அனைவருக்கும் போதுமான அளவுக்கு வேலை இருக்கவில்லையா? அல்லது பரிசுத்த யாக்கோபு அடிகளார் மரிப்பதற்கு ஆயத்தமாய் இருந்தபடியாலும், அவர் ஓட்டத்தை முடித்துவிட்டபடியாலும்தான் அவர் மரித்துப்போக அனுமதிக்கப்பட்டாரா? பரிசுத்த பேதுரு அடிகளார் தன் ஓட்டத்தை முடிக்காத காரணத்தினால்தான் அத்தருணத்தில் அவர் உயிரோடு இருக்கும்படியாகக் காக்கப்பட்டாரா? இந்த யோசனைகள் எதுவும் சரியானதாகத் தோன்றுகிறதில்லை. மாறாக இரண்டு அப்போஸ்தலர்களும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாகவும், அவரால் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவர்களாகவும் காணப்பட்டார்கள் என்றும், இராஜ்யத்திற்குத் தகுதியாக்கிடும் பூரண அன்பிற்கான இலக்கிலே காணப்பட்டார்கள் என்றும் கருதுவோமாக. தமக்காகப் பேதுருவைக்கொண்டு செய்யும்படிக்கு ஒரு விசேஷித்த வேலையைப் பெற்றிருந்தபடியால், கர்த்தர் பேதுருவைப் பாதுகாத்து வைத்தார் என்றும், பரிசுத்த யாக்கோபு அடிகளார் செய்வதற்கு எதுவும் இல்லை என்பதினால் இல்லாமல், மாறாக அவர் அத்தகைய சமயத்தில், அடைந்த அத்தகைய மரணத்தின் மூலம் அதிகமான காரியத்தைச் செய்ய முடியும் என்பதினாலேயே - அதாவது வேறொரு தருணத்திலோ அல்லது வேறொருவருடைய மரணத்தின் மூலமோ செய்யப்பட முடியாததை, அத்தருணத்தில், அத்தகைய அவருடைய மரணமானது சிறப்பாய்ச் செய்யும் என்பதினாலேயே அவர் சிரச்சேதம் பண்ணப்படுவதற்குக் கர்த்தர் அனுமதித்தார் என்றும் நாம் கருத வேண்டும். பரிசுத்தயாக்கோபு அடிகளார் அப்போஸ்தலர்கள் மத்தியில் வழிநடத்துபவராகக் காணப்பட்டார் மற்றும் அவரது மரணமானது மகா அதிர்ச்சியை உண்டுபண்ணி, சத்தியத்தைப் பறைசாற்றும் விஷயத்தில் புதுப்பெலனும், வைராக்கியமும் கொள்ளத்தக்கதாகக் கர்த்தருடைய பின்னடியார்களை விழித்தெழப் பண்ணினதாய் இருந்தது. இச்சம்பவம் ஜனங்கள் அப்போஸ்தலர்கள் மீது கொண்டுள்ள மதிப்புணர்வை அதிகரிக்கச் செய்தது மற்றும் அவர்களது போதனைகளுக்கு இன்னும் ஊக்கமாய்ச் செவிக்கொடுக்கச் செய்தது மற்றும் கர்த்தருடைய நோக்கங்களானது, சபையினுடைய "பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்" மீது எவ்வாறு பெரிதும் சார்ந்துள்ளது என்பதை அவர்கள் உணரச் செய்தது (வெளிப்படுத்தல் 21:14).

---